

ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025–26–ஆம் கல்வியாண்டு பாடத்திட்ட தொடக்க விழாவில் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு மாணவர்களை வரவேற்று அவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் வழங்கி வாழ்த்தினார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாமன்ற உறுப்பினர் தேவி ஏசுதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை, சோழிங்கநல்லூர் வட்டத்திற்குட்பட்ட ஒக்கியம் மடுவில், நேற்று (30.06.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் ரூபாய் 338 கோடி மதிப்பீட்டில் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களில் தீவிர வெள்ள தணிப்பிற்கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணிகள் திட்டத்தினை துவக்கி வைத்து, இத்திட்டத்தின் கீழ் ஒக்கியம் மடுவினை ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மறுசீரமைப்பு மற்றும் புத்தாக்கம் செய்யும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், நீர்வளத் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்.

500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை!

# அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும்!

## போக்குவரத்து - மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜூலை 1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் அனைத்து வீட்டு மின்இணைப்புகள், குடிசைமற்றும் குறுந்தொழில் நுகர்வோர்கள், விசைத்தறி நுகர்வோர்கள், 50கிலோ வாட் வரை உள்ள தாழ்வ ழுத்த தொழிற்சாலைகள் மற் றும் 500 யூனிட் வரை பயன் படுத்தும் சிறு வணிகர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர் வும் இல்லை. இதன்மூலம் 2.83 கோடி மின் நுகர்வோர் கள் பயனடைவார்கள். மேலும் தற்போது உள்ள அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என போக்குவரத்து மற்றும் மின் சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வரு மாறு:-

மின்சார வாரியங்களின் நிதி நிலைமை சீராக இருப்ப தற்காக அந்தந்த மாநிலங்க ளின் ஒழுங்குமுறை ஆணை யம் அவ்வப்பொழுது மின்கட்டணத்தில் மாற்றம் செய்துவருகிறது. தமிழ் நாட்டை பொறுத்த வரை யில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பல்லாண்டு மின்கட்டண உயர்வை அறிவித்து ஆண்டு தோறும் நுகர்வோர் விலைக் குறியீட்டு அடிப்படையில் மின்நுகர்வோர் களுக்கு மின் கட்டணத்தை மாற்றி அமைத்து ஆணை வெளியிடு கிறது. அதன்படி 2025-26 ஆண்டிற்கு ஜூலை 1 ஆம் தேதி முதல் வரக்கூடிய மின்கட் டண மாற்றங்களில் பொது மக்கள் மற்றும் நுகர்வோர் நலன் கருதி தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் அறிவு றுத்தலின் படி அனைத்து 2.42 கோடி வீட்டு நுகர்வோர் களுக்கு ஏற்படக்கூடிய மின் கட் டண மாற்றங்களை அரசே ஏற்று அதற்கான மானியத்தொகையை தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் என்று உத்தரவிட் டதை ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் அறிக்கையாக வெளி யிடப் பட்டது.

மேலும் அனைத்து வீட்டு மின்நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங் கப்படும் மற்றும் குடிசை இ ணை ப் பு க ளு க் கு ம் தொடர்ந்து இலவச மின்சா ரம் வழங்கப்படும்.

100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் அனைத்து வீட்டு மின்நுகர்வோர்களுக்கும் உயர்த் தப்பட்ட மின்கட்ட ணத்தை, தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவ தால், ஆண்டொன்றுக்கு ரூ.374.89 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது.

வீட்டு மின் நுகர்வோர் களுக்கு, நிலைக்கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவ தில் இருந்த முழுவிலக்கு தொடர்ந்து அளிக்கப்படுகி றது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீட்டு மின்நுகர்வோர்களும் பயன டைவார்கள்.

தற்பொழுது விவசாயம், கைத்தறி, விசைத்தறி , வழிப் பாட்டுதலங்கள் மற்றும் தாழ் வழுத்த தொழிற்சாலை ஆகிய மின்கட்டண பிரி விற்கு வழங்கப்பட்டு வரும் மின்சார மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

**தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்கட்டணச் சலுகைகள்:**

1. இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிக மின் நுகர் வோர்களுக்கு உயர்த்தப்பட் டுள்ள மின்கட்ட ணத்தை (Energy charges) தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவ தால், ஆண் டொன்றுக்கு ரூ.51.40 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இத னால் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 34 இலட்சம் சிறு வணிக மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள்

2.50 கிலோவாட் வரை ஒப்பந்த பளு (sanctioned load) கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு (LT (III) B Industries) உயர்த்தப் பட்டுள்ள மின்கட்ட ணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.76.35 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.81 லட்சம் தாழ்வழுத்த தொழிற் சாலை மின்நுக ர்வோர்கள் பயனடைவார்கள்.

3.குடிசை மற்றும் குறு தொழில்களுக்கு (LT (III) A(1) - Cottage and Micro Industries) உயர்த்தப்பட்ட மின்கட்ட ணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.9.56 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.70 லட்சம் குடிசை மற்றும் குறு தொழில் மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

4. விசைத்தறி நுகர் வோர்களுக்கு 1000 யூனிட் வரை இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் 1001 யூனிட்டு களுக்கு மேல் உயர்த்தப் பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானிய மாக வழங்குவதால், ஆண் டொன்றுக்கு ரூ.7.64 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகி றது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 1.65 லட்சம் விசைத் தறி நுகர்வோர்களும் பயன டைவார்கள்.

எனவே 2025-26 ஆம் ஆண்டின் மின்கட்டண உயர் வின் படி தமிழ்நாட்டில் சுமார் 2.83 கோடி மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல் லாமல் பயனடைவார்கள். இதனால் தமிழக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.519.84 கோடி கூடுதல் செலவாகும். இந்த மானியத் தொகை யினை தமிழக அரசு தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும்.

இது தவிர பெரிய தொழில், பெரிய வணிக நிறு வனங்கள் மற்றும் பிறவகை கட்டண பிரிவு களுக்கு தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள வாறு 3.16%-க்கு மிகாமல் மின்கட்டணம் உயர்த்தப்படு டும்.

இவ்வாறு அமைச்சர் சா. சி.சிவசங்கர் அறிவித் துள்ளார்.

சென்னை புறநகர் பகுதிகளில்

# வெள்ளப் பாதிப்பைக் குறைப்பதற்கான மறு சீரமைப்பு பணி!

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 1-

2025-26ஆம் ஆண்டிற் கான நீர்வளத்துறையின் நிதி நிலை அறிக்கையின் பொழுது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களால் சென்னை மற்றும் அதன் புற மாவட்டங்களான திருவள் ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்க ளில் தீவிர வெள்ள தணிப்புக் கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணி கள் ரூபாய் 338 கோடி மதிப் பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இ வ் வ றி ப் பி னை த் தொடர்ந்து, மடுவினை மறு சீரமைத்து புத்தாக்கம் செய் யும் பணி, மூடிய கான்கிரீட் வடிகால்வாய்கள் அமைக்கும் பணி, நீர்த்தேக்கம் உருவாக் கும் பணி இது தவிர வெள்ளத் தடுப்புச் சுவர் மற்றும் உள் வாங்கி அமைக்கம் பணி, கரையினை மறு சீரமைத்து பலப்படுத்தும் பணி. அம்பத் தூர் தொழிற்பேட்டை பகுதிக ளில் வெள்ள பாதிப்பை குறைப்பதற்கான ஒருங்கி ணைந்த வெள்ள மேலாண்மை தீர்வு பணி மற் றும் வெள்ளப்போக்கி கால் வாய் அமைக்கும் பணிகளை ரூ.338 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான அர சாணை பெறப்பட்டு, முதற் கட்ட ஒப்பந்த பணிகள் இறுதி செய்யப்பட்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக நேற்று (30.06.2025) நீர்வ ளத்துறை அமைச்சர் அவர் கள் ஒப்பந்த பணிகள் இறுதி செய்யப்பட்ட ரூ.27.00 கோடி மதிப்பீட்டிலான தென் சென்னை புறநகர் பகுதிக ளின் வெள்ள பாதிப்பை குறைப்பதற்கான தீவிர வெள்ள தணிப்புக்கான ஒருங் கிணைந்த மறு சீரமைப்பு மற் றும் புத்தாக்கம் செய்யும் பணி யினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நீர்வளத்துறையின் முதன் மைத் தலைமைப் பொறியா ளர் மற்றும் தலைமைப் பொறி யாளர் (பொது) ரமேஷ் மற்றும் நீர்வளத்துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்த னர்.

கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் நாளை நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை; சைதை சாதிக் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூலை.1-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பினர் சேர்க் கையை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் நாளை 2-ஆம் தேதி மாலை கண் டோன்மெண்ட் பல்லாவ ரத்தில் மாவட்டச் செயலா ளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் தலை மையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சிறப்பு பேச்சாளர் சைதை சாதிக், இளம் பேச்சாளர் வடக்குப் பட்டு பேரரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப் புரை.

முதல்வர் - அன்புத் தலை வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, காஞ்சிபு ரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பி னர் சேர்க்கையை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் நாளை 2-ஆம் தேதி மாலை 6.00 மணியளவில், கண் டோன்மெண்ட் பல்லாவ ரம் பேருந்து நிலையம் அரு கில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் தலைமையில் நடை பெறுகிறது.

மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலா ளர்கள் இ.கருணாநிதி, எம். எல்.ஏ., வரலட்சுமி மதுசூத னன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவ நாதன் ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர். கண்டோன்மென்ட் நகரச் செயலாளர் டி.பாபு அனை வரையும் வரவேற்று பேசுகி றார்.

இக்கூட்டத்தில் தலை மைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக், கழக இளம் பேச்சாளர் வடக்குப்பட்டு பேரரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக அமைப் புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, காஞ்சிபுரம் நாடா ளுமன்ற உறுப்பினர் க.செல் வம், தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதி யலிங்கம், தாம்பரம் மாநக ரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா, எம்.எல்.ஏ., காஞ்சிபு ரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந் தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர் மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன் புச்செழியன், க.அன்புச்செல் வன், ஆதிமாறன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணா ளன், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்க ளத்தூர் எஸ்.சேகர், எஸ். இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணா நிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம் பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தா னம், எம்.டி.லோகநாதன், கே.பி.ராஜன், இ.மணி, நக ரச் செயலாளர்கள் ஜெ.சண் முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம். கே.டி.கார்த்திக், ஆர்.சதிஷ் குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னு ராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செய லாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ். கே.இப்ராகிம், ஆர்.டி.பூபா லன், கீதாஆனந்தன், கே. எத்திராஜ், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், செ.அருள்தேவி, மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர்கள் தையூர் வீ.விஜயகு மார், ப.இராமமூர்த்தி, டி. கே.கமலகண்ணன், கே. மணிகண்டன், கோ.ஜானகி ராமன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கள் என்.கனகராஜ், எஸ். ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவ ராஜ், பா.ஞானபிரகாசம், தி.க.பாஸ்கரன், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ். எம்.ஜெயகரன், எஸ்.கர் ணன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த் தாண்டம், தாம்பரம் மாந கர இளைஞரணி அமைப் பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகி கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்தி ரன் ஆகியோர் நன்றி கூறு கின்றனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சொ.வேலு தலைமை!

# “ஓரணியில் தமிழ்நாடு” - புரசைவாக்கத்தில் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா - என்.ஆர்.இளங்கோ எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜூலை.1-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, எழும்பூர் வடக்கு பகுதி சார்பில் “ஓர ணியில் தமிழ்நாடு” மாபெ ரும் பொதுக்கூட்டம் (02-07-2025 - புதன்கிழமை) அன்று மாலை 6.00 மணிய ளவில், சென்னை, புரசை வாக்கம், தானா தெருவில் பகுதிச் செயலாளர் சொ. வேலு தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலா ளர் திருச்சி என்.சிவா எம். பி. கழக சட்டத்துறை செய லாளர் வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி. ஆகி யோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமா றன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தா மன், ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றி அழகன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிர சன்னா, மற்றும் ப.ரங்கநா தன், வி.சுதாகர், பி.எம். யாழினி, கோ.ஏகப்பன், ஸ்ரீராமுலு எம்.சி, கே.எஸ். எம்.நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., அ.நிர்மலா தேவி, பரிதி இளம் சுருதி எம்.சி, பாத்திமா முசாபர் எம்.சி,

எழும்பூர் தெற்கு, வடக்கு பகுதி கழக நிர்வா கிகள் எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஊ.கே. கருணாகரன், கே.வள்ளி, சூளை சுப்பராயலு, எஸ். ரசூல், டி.வி.வேலு, எம். மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், எழும்பூர் தெற்கு, வடக்கு வட்ட கழக செயலாளர்கள் தி. தயாளன், வி.அபாய், க.மனோகர், ந.பாபு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு (எ) சந்திரசேகரன், எஸ். டால்பின் ஹரி, இ.மொய் தீன், வான்மதி கதிரவன் மற் றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள், முன்னோ டிகள்கலந்து கொண்டு சிறப் பிக்கின்றனர்.

ஜூலை 8 அன்று சேலத்தில் நடைபெறுகிறது! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை

# தி.மு.க. அயலக அணி மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## அயலக அணிச் செயலாளர் – எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிக்கை!

சென்னை, ஜூலை 1-

திமுக அயலக அணி, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர் கள், ஆலோசனைக் கூட்டம், குறித்து கழக அயலக அணி செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம். அப்துல் லாவின் அறிக்கை வருமாறு,

கழக அயலக அணி மாநில மாவட்ட நிர்வாகி கள் ஆலோ சனைக் கூட்டம் மற்றும் கலை ஞர் நூற்றாண்டு நிறைவு கருத் தரங்கம் பவள விழா கொண்டாட்டம் 8.7.2025- செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணியளவில் சேலம் - அருணாசலம் தெரு - காந்தி சிலை அருகில் உள்ள நேரு கலையரங்கில் கழக அயலக அணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி முன்னிலையில், எனது (எம்.எம்.அப்துல்லா) தலைமையில் நடைபெறுகிறது.

கழக அயலக அணி இணை - துணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார், வழக் கறிஞர் மனோ ராஜ் சண்முக சுந்தரம், வழக்கறிஞர் புகழ் காந்தி, துணைச் செயலா ளர்கள், சேலம் உமாராணி, வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி, வழக்கறிஞர் கன்னிகை ஜி. ஸ்டாலின், விஜயன் ராமகிருஷ் ணன், முத்துவேல் ராமசாமி, சேகர் ஜெய் மனோகரன், குமரி ஏ பாபு வினிபிரேட், ஆகியோ ரும் முன்னிலை வகிக்க, நடை பெறும் இக்கூட்டத்தில் அய லக அணி பொறுப்பு துணைப் பொதுச் செயலாளர் - நாடா ளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா கலந்துகொண்டு ஆலோ சனை வழங்குகிறார்,

இ க் கூ ட் ட த் தி ற் கு அனைத்து மாவட்ட அயலக அணி நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்,

பொருள் :

1 கழக ஆக்கப் பணிகள்,

2 .2026 சட்டமன்றத் தேர் தல்.

இவ்வாறு எம்.எம். அப்துல்லா எம்.பி. தெரி வித் துள்ளார்.



ஒன்றிய உள்துறை அமைச்சரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான அமித்ஷா தலைமையில் நேற்று (30.06.2025) புதுதில்லி பாரத் மண்டபத்தில், நடைபெற்ற தேசிய அளவிலான கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்துகொண்டார். உடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக்குமார் உள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் பேரூர் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் டபுள்யு. இ.எஸ். சுகுமாரன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு நல திட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக்கழக பேச்சாளர்கள். குமரி பிரபாகரன். தே.சிலம்பரசன் மாநில இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர் பி சேகர் பேரூர் செயலாளர் என் பாண்டியன், பேரூராட்சி மன்ற தலைவர் டபுள்யு இ எஸ் திருமதி. இல்லாமல்லி ஸ்ரீதர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி. சஞ்சய் காந்தி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் மன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.